முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கக்கூடியவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. உணவுப் படியாக நாளொன்றுக்கு ரூபாய் 175 வழங்கப்படுகிறது. மேலும், முகாமில் தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. இவர்களை அவர்களுடைய உறவினர்கள் அனைத்து வேலை நாட்களிலும் சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டவர்கள்மீதும் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விரைந்து முடிக்க காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கையின் விளைவாக, 15-7-2021 அன்று அருண்ராஜ், முருகையா உள்ளிட்ட 10 இலங்கைத் தமிழர்கள், அவர்களது நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்மீது நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையில், ஒன்றிய அரசுக்கு உரிய தகவல் தெரிவித்து, இலங்கைத் தமிழர்கள் தங்களது நாட்டிற்குத் திரும்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயைப் போல் எங்களிடத்தில் அன்பு காட்டி, அரவணைத்து. . .

5. உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் பயன்படுத்திய வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பில் மாற்றம் செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர், திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் பேசுகிறபோது, கஜானாவை ** என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். ** வார்த்தையைத் திருத்தி 'காலியாக்கியிருக்கிறார்கள்' என்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி திருத்தம் செய்யப்படுகிறது.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— *தொடர்ச்சி*

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயைப் போல் எங்களிடத்தில் அன்பு காட்டி. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பேசி முடித்த பிறகு பேசலாமே. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2021 ஆகஸ்ட் 27] [பேரவைத் தலைவர்]

சட்டத் துறை அமைச்சர் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்த பிறகு பேசலாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு காட்டி அரவணைத்து, நண்பனாய், ஆசானாய், தலைவனாய் வழிநடத்திய எங்களுடைய அன்புத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். சாதிக்க வந்தவர் மட்டுமல்ல, சாதனையாளர்களையும் சிறப்பிக்க வந்தவர். நல்லாட்சி நல்கிட மட்டும் வந்தவரல்ல, நல்லவர்களையும் . . .*

6. ஆளும் கட்சி உறுப்பினர்கள்/அமைச்சர்கள் விவாதங்களில் உரையாற்றும்போது மட்டும் முன்னோடிகளுக்கு வணக்கம் செலுத்துதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க நாளிலே நான் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். இப்போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதற்கு நேரடியாக வரவேண்டும். நீங்கள் பதில் அளித்து பேசுகிறபோதுகூட சில வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். இன்னும் சொல்கிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும்; கண்டிப்பான வேண்டுகோள். அதேபோல் அமைச்சர் பெருமக்களுக்கும் ஒரு கண்டிப்பான வேண்டுகோள். நீங்கள் உங்கள் உரைகளில், பதில் அளிக்கிற நேரத்தில், உங்களை ஆளாக்கிய, உங்களை உருவாக்கிய நம்முடைய முன்னோடிகளுடைய பெயரைக் குறிப்பிட்டு வணக்கம் செலுத்திப் பேசுவது இயல்பு. ஆனால், கேள்வி நேரத்தின்போது அப்படிப் பேசக் கூடாது, அதேமாதிரி, சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்கிறபோதும் பேசக் கூடாது. ஏனென்றால் நேரத்தின்*

அருமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, ஒவ்வொரு முறையும் இதை நான் சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. இதுதான் என்னுடைய கட்டளை என்பதை. இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்களுக்கும் என்பதை இங்கே இருக்கக்கூடிய ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் *(அறிமுகம் செய்தல்)*—
தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு *(திருத்தச்)* சட்டமுன்வடிவு, 2021—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–00

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)*

5. உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் பயன்படுத்திய வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பில் மாற்றம் செய்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*